*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய* www.iaraindia.com
***தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்***
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
*பகுதி V, பதிப்பு 13 - ஏப்ரல் 2018*
*UGC Approved Journal (64089), © Author*

# ஔவையார் வள்ளுவர் சுட்டும் சமூக நெறி

**முனைவர் கு. சரஸ்வதி**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
சிதம்பரம்பிள்ளை மகளிர் கல்லூரி, மண்ணச்சநல்லூர்

## முன்னுரை

*தனிஉடைமை என்ற நிலையினைத் தாண்டி பொதுவுடைமை என்ற நிலைக்கு மனிதனை இட்டுச்செல்வதே சமுதாயம். சமூகத்தால் மனிதன் வளர்க்கப்படுகின்றான். மனிதனிடம் பல சமூக வழக்காறுகள் உறைந்திருக்கும். சமுதாயம் என்ற சொல்லிற்கு ''மக்களின் திரள்'' என்னும் பொருளினைத் தமிழ்ப்பேரகராதியும், சொற்களஞ்சியமும் தெரிவிக்கின்றன. பரந்த நிலப்பரப்பில் தங்களுடைய அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றிக் கொண்டு வாழ்கின்ற மக்கள் கூட்டம் சமுதாயம் எனப்படும். இவ்வாறாக குழுவாக வாழுகின்ற மனிதன் சில வரையறுக்கப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது. அவ்வரையறுக்கப்பட்ட விதிமுறைகள் குறித்து நீதி நூல்களைப் படைத்த ஔவையார் வள்ளுவர் ஆகிய இருவரும் தம் நூல்களில் பதிவுச் செய்துள்ளனர். அப்பதிவுகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

### நட்பு

மனிதன் வாழ்வில் தளர்ச்சி யடைந்த காலத்தில் நல்ல நட்பு துணையாக நிற்கும். எனவே நட்பைத் தேர்வுச் செய்வதில் கவனம் கொள்ள வேண்டும். ஆராய்ந்து தெரியாமல் கொள்கின்ற நட்பினால் துன்பங்கள் விளையும். தீய நட்பு மீளமுடியாத துன்பத்தைத் தரும். நல்லாரோடு நட்புக்கொள்ள வேண்டும் என்பதை,

*“நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம்மிக்க*
*நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்*
*குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு*
*இணங்கி இருப்பதுவும் நன்று” (மூதுரை - பா.8)*

என்ற பாடல் மூலம் உணர்த்துகின்றார். மனத்தாலும், வாக்காலும், உடலாலும் எக்காலத்தும் நல்லதையே நினைத்தும் பேசியும் செய்தும் வாழ்கின்ற பெரியோர்களை கண்ணால் காண்பதும் நன்மை பயக்கும். பயனுள்ள கருத்துக்களை நயம்பட உரைக்கும் பெரியோர் வார்த்தைகளைக் காதால் கேட்பதும் நன்மை பயக்கும். அறிவால் சிறந்து குணங்களால் உயர்ந்து வாழும் பெரியோர்களின் பண்புகளை மீண்டும், மீண்டும் எடுத்துரைப்பதும் நன்மை பயக்கும். அத்தகைய நல்லவர்களோடு சேர்ந்து நட்புணர்ச்சியோடு வாழ்வதும் நன்மை பயக்கும் என்று சுட்டுகின்றார் ஔவையார். வள்ளுவர் நட்புக்குறித்து நட்பு, நட்பாராய்தல், தீ நட்பு, பழைமை என்ற நான்கு அதிகாரங்களில் சுட்டியுள்ளார். நற்குணமுடையாரின் கேண்மை நூற்பொருள் கற்குந்தோறும் இனிமை பயப்பதை ஒப்பதாகும் என்பதை,

*“நவில் தொறும்நூல்நயம் போலும் பயில்தொறும்*

*பண்புடை யாளர் தொடர்பு"*
*(குறள்.783)*
என்ற குறள் வழி எடுத்துரைக்கின்றார்.

**கொடை**

வள்ளல் குணம் கொண்ட மன்னர்கள் எந்த நிலையிலும் பிறருக்குக் கொடுத்து உதவுவதாகிய குணத்தில் இருந்து மாறமாட்டார்கள். நல்லவள்ளன்மைக் குணம் உள்ள சான்றோர்கள் தம் பொருளைத் தமது என்று நினையாதவர்கள். மேலும் தாங்கள் வறுமைப்பட்ட காலத்திலும் தங்களை நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் தம்மிடம் இருக்கின்ற பொருளை கொடுத்து உதவுவார்கள். இல்லை என்னும் குணம் அவர்களுக்கு இருப்பது இல்லை என்றும் ஒளவையார் சுட்டுகின்றார்.

*"ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும்அந் நாளும் அவ்வாறு*
*ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் - ஏற்றவர்க்கு*
*நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்*
*இல்லைஎன மாட்டார் இசைந்து"*
*(நல்வழி. பா.9)*

என்னும் பாடலில் ஆற்றிலே நீர்பெருக்குக் குறைந்து வற்றிப்போய் வெயில் வெப்பத்தால் ஆற்றுமணல் கொதிப்படைந்து நடப்போர் கால்கள் சுடுகின்ற முதுவேனில் காலத்திலும் அந்த ஆறு முன்போலவே தன்னிடத்துள்ள ஊற்று பெருக்கினாலே உலக மக்களின் நீர்வேட்கையைத் தணிக்கும். வள்ளல் குணம் உடையவர்களிடத்தும் அக்குணம் இருக்கும் என்றும் சுட்டுகின்றார்.

*"இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்*
*குலனுடையார் கண்ணே உள"*
*(குறள்.223)*

இல்லென இரந்துவந்தானுக்கு அவன் துன்பத்தை தானே கூறுவதற்கு முன்பாகவே இல்வாழ்வான் அதனையுணர்ந்து ஈதல் தன்மை நற்குடியில் பிறந்தவனிடம் மட்டுமே உள்ளது என்கிறார் வள்ளுவர்.

**செய்ந்நன்றி அறிதல்**

நல்லவருக்குச் செய்த உதவி நிலைத்து நிற்கும். தீயவருக்குச் செய்த உதவி தேய்ந்து மறையும் என்பதை,

*"நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்*
*கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத*
*ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்*
*நீர்மேல் எழுத்திற்கு நேர்"*
*(மூதுரை - பா.15)*

என்ற பாடலின் வழி விளக்குகின்றார். இவ்வடிகளில் கருங்கல்லின் மேல் செதுக்கி எழுதப்பட்ட எழுத்து நீண்டகாலம் அழியாது பின் தலை முறையினரும் படித்து அறியும் வண்ணம் நிலைத்து நிற்கும். அதுபோல நற்பண்புகள் மிகுந்த ஒருவருக்குச் செய்த உதவி நிலையான நலன்களைக் கொடுத்து விளங்கித் தோன்றும். நீரின்மேல் விரல்நுனியில் எழுதப்படும் எழுத்து முழுவதுமாக எழுதுவதற்கு முன்னமே விரைந்து அழிந்து விடும். அதுபோல நற்பண்புகள் அற்ற இரக்கம் என்றொரு பொருள் இல்லாத நெஞ்சமுடைய இழிந்தோர்க்குச் செய்த உதவி மிக விரைவில் மறக்கப்பட்டு மறைந்து போகும் என்கிறார் ஒளவையார். ஒருவர் செய்த நல்ல உதவியை மனிதன் ஒருபோதும் எந்நிலையிலும் மறத்தல் கூடாது. நன்றி மறப்பது அறத்தை இழிவு செய்வது போன்றதாகும் என்றும் கூறுகிறார்.

செய்ந்நன்றியின் அளவிலாப் பெருமையை,

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*
*(குறள்.110)*

என்ற குறள் மூலம் வள்ளுவர் சுட்டுகின்றார்.

தனக்குச் செய்த எந்த உதவியை ஒருவன் மறந்தாலும் ஈடேறலாம். ஆனால் செய்யாமல் செய்த உதவி, காலத்தால் செய்த நன்றி, பயன்தூக்கார் செய்தவுதவி ஆகியவற்றை மறந்தவனுக்கு ஒரு காலத்திலும் உய்வில்லை என்று உணர்த்துவதாக இக்குறள் அமைகின்றது.

**நடுவுநிலைமை**

நடுவுநிலைமை என்பது எந்தப்பக்கமும் சாயாமல் நடுநிற்பதாகும். நீதி தவறினால் அழிவுக்கு காரணமாய் அமையும். எண்ணற்ற துன்பங்கள் வந்து

சேரும். நடுவுநிலை தவறாமல் தீர்ப்பு வழங்காதவரின் இல்லத்தில் பேய்கள் குடிபுகும். எருக்கஞ்செடிகள் பூப்பூக்கும். பாதாள மூலி என்னும் தாவரம் படரும். பாம்புகள் புகுந்து துன்பம் தரும் என்பதைப் பின்வரும் பாடல் மூலம் ஔவையார் குறிப்பிடுகின்றார்.

*“வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே*
*பாதாள மூலி படருமே - மூதேவி*
*சென்றிருந்து வாழ்வளே ; சேடன் குடிபுகுமே*
*மன்றோரம் சொன்னார் மனை”* (நல்வழி - பா.23)

நடுவுநிலைமையுடையவர், நடுவுநிலைமை இல்லாதவர் நிலைய அவரவர்க்கு முறையே பின்னர் புகழ் உள தாதலையும், இல தாதலையும் கொண்டறியலாம் என்று எடுத்தி யம்புகிறார் வள்ளுவர்.

*“கெடுவல்யாள் என்பது அறிகதன் நெஞ்சம்*
*நடுவொரீஇ அல்ல செயின்”* (குறள்.116)

ஒருவன் தன் நெங்சம் நடுவுநிலை பிறழ்ந்து தகாத ஒன்றைச் செய்யப்புகுமாயின் அதற்கேதுவாக தனக்குக் கேடு வருமென்பதை முன்னறிந்து கொள்க. அதாவது நடுவுநிலை பிறழ்தல் தனக்கு வரும் கேட்டிற்கு அறிகுறி என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். நடுவுநிலைமையில் நில்லாததால் வரும் கேட்டினை மேற்கூறிய குறட்பாவின் வழி எடுத்துரைக்கின்றார்.

**வினைத் திட்பம்**

மனிதனொருவன் எக்காலத்திலும் மனதிட்பத்துடன் இருப்பதனால் எத்தகைய பெரிய துன்பத்தையும் எதிர்கொள்ளலாம். மனஉறுதி இல்லாமல் இருந்தால் நன்மை எதுவும் கிட்டாமல் போய்விடும். துன்பங்கள் வரும் காலத்தில் துன்பங்கள் வந்துவிட்டனவே என்று மனம் வாடுவதை விடுத்து அத்துன்பங்களையே படிக்கட்டுகளாகக் கொண்டு வெற்றிபெறப் பழக வேண்டும். அத்தகைய மன உறுதி இருந்தால் வாழ்வில் அனைத்து வளங்களும் பெருகும். இக்கருத்துக்களை இருபெரும் சான்றோர்களும் தம் பாடல்களில் பதிவுச் செய்துள்ளனர்.

மனிதன் தான் துன்புற்ற நிலையிலும், தோல்வியுள்ள நிலையிலும், ஏழ்மை நிலையிலும் மன எழுச்சி குன்றிவிடக்கூடாது.

*“ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு”* (கொன்றைவேந்தன் பா.86)

இவ்வடியில் ஆக்கத்திற்கு இலக்கணம் எதற்கும் தளராத சிறந்த ஊக்கமே என்பதை ஔவையார் சுட்டியுள்ளார். மனத்திட்பம் தவிர்த்த மற்றவலிமை பயன்படாமையை எடுத்துக் கூறுவதாக,

*“எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்*
*வேண்டாரை வேண்டாது உலகு”* (குறள்.670)

என்ற குறள் அமைந்துள்ளது. வினை செய்தற்குரிய மனத்திண்மை நீங்கிய மற்றைய திட்பம் எத்துணை இருப்பினும் அவை பயன்படாது. மேலும் மனத்திட்பம் இல்லாதவனை உலகு வேண்டாது என்பது இங்கு சுட்டப்பட்டுள்ளது.

**செயல் தூய்மை**

வாழ்க்கையில் மேற்கொள்ளும் நற்செயல்கள் நல்விளைவையும், தீய செயல்கள் தீய விளைவையும் ஏற்படுத்தும் தன்மையவை ஆகும். ஒவ்வொரு பிறவியிலும், செய்கின்ற பாவங்கள் தொடர்கின்ற பிறவிதோறும் வந்து துன்பம் செய்யும் இயல்புடையவை. முற்பிறவியில் செய்த செயல்களின் விளைவாகவே வாழ்கின்ற பிறவியில் வளமையும், வறுமையும் ஏற்படுகின்றன. பாவ புண்ணியங்களே வாழ்வைக் கட்டமைக்கின்றன. இதனைத் தான் சமயங்கள் எடுத்துக் கூறுகின்றன. அதனால் பிறவாப் பெருநிலை அடைய வாழ்கின்ற வாழ்க்கையில் தனக்கும், பிறருக்கும் நன்மைகள் விளையத்தக்க செயல்களை மட்டுமே செய்ய வேண்டும் என்கின்றார் ஔவையார்.

*“புண்ணியம்ஆம் பாவம்போம் போனநாள் செய்தஅவை*
*மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள் - எண்ணுங்கால்*
*ஈதொழிய வேறில்லை எச்சமயத்தோர் சொல்லும்*
*தீதொழிய நன்மை செயல்”* (நல்வழி - பா.1)

என்னும் பாடலில் உணர்த்துகின்றார். இயன்றவரை நன்மைகள் செய்து வாழும்

வாழ்க்கை நலம்பல நிகழ வழிவகுப்பதாகும்.

ஒருவன் வாழ்க்கையில் தனக்கு நலமே வேண்டுமென விழையின் தீவினை யாதொன்றும் தன்னை அணுகாது காக்க வேண்டும். தீவினையை மனத்தாலும் எண்ணக்கூடாது என்பதை,

*"தீப்பால் தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால்*

*தன்னை அடல்வேண்டா தான்" (குறள்.206)*

என்கின்ற குறள்வழி துன்பநோய்கள் தன்னைக் கிட்டாதிருக்க வேண்டின் தீயவற்றை தான் பிறர்க்குச் செய்யாதொழிக என்று திருவள்ளுவர் உரைக்கின்றார்.

**தொகுப்புரை**

மனிதன் சமூகத்துடன் இணைந்து செயலாற்ற அவசியமானவை நடுவுநிலைமை, வினைத்திட்பம், செயல்தூய்மை. நல்ல செயல்களை செய்வதில் ஒரு மனிதன் உறுதியுடன் திகழ வேண்டும். மனிதன் தீவினைக்கு அஞ்சி நல்ல செயல்களைச் செய்தால் சமூகத்தில் உயர்நிலையை அடைவான் என்பதை ஔவையார் மற்றும் வள்ளுவர் ஆகிய இருவரும் தம் பாடல்களில் வலியுறுத்தியுள்ளனர்.

சமூகத்தில் உயர் பொறுப்பில் உள்ள ஒருவன் நடுவுநிலைமையுடன் செயல்பட வேண்டும். அவ்வாறு அவன் நடுவுநிலையுடன் செயல்பட்டால் அவன் வாழ்வு மட்டும் அல்லாது சமூகமும் மேம்படும் என்பதை இருவரும் தம் பாடல்களில் சுட்டியுள்ளனர். சமூக நெறிகுறித்த இவ்விரு சான்றோர்களின் கருத்துக்களும் ஒப்புமையுடையனவாகக் காணப்படுகின்றன.

**பார்வை நூல்கள்**

1. எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ) - திருக்குறள் பரிமேலழகர் உரை
2. வித்வான் என்.சுப்ரமண்யன் - பிற்கால நீதி நூல்கள்
3. சாமி. பழனியப்பன் - ஔவையார் அருளிய நீதி நூல்கள்
4. மு. பொன்னுசாமி - தமிழ் நீதி இலக்கிய வரலாறு